**Nirmala Hr. Sec. School**
Kolathur - 636 303, Salem Dt.

தேதி: 09/06/2020

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம் . தங்கள் **Indian Integral Community (IIC) CHARITABLE TRUST,KOLATHUR** சேவை நிறுவனத்தின் மூலமாக கடந்த ஆண்டு பள்ளியின் பல்நோக்கு கலையரங்க வளர்ச்சி நிதி வழங்கியமைக்கும் , ஜனவரி 26 , 2020ல் நடைபெற்ற மெகா இரத்த தான முகாமிற்கு தங்கள் நிறுவனத்தின்

கொரானா நோய்த்தொற்றின் காரணமாக நீண்ட நாட்கள் தமிழக அரசு ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தது.. இச்சூழலில் நம் பகுதியில் மிக சிறப்பாக பணியாற்றிய காவல் துறை , பேரூராட்சி சுகாதாரத்துறை, மருத்துவத் துறை மற்றும் கல்வித்துறை ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று எண்ணிய சேலம் மாவட்டம் கொளத்தூர் நிர்மலா மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்கள் முதற்கட்டமாக நிவாரண பொருட்கள் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பள்ளி வழிகாட்டுதலின் படி முன்னாள் மாணவர்கள் , **Indian Integral Community (IIC) CHARITABLE TRUST,KOLATHUR** தொடர் நிவாரணப் பணியில் ஈடுபட்டு செயலாற்றி கொண்டு வருகிறார்கள்.இதில் தங்கள் (IIC) Charitable Trust, Kolathur ன் பங்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது. இதுவரை சுமார் **5 லட்சத்துக்கும்** மேற்பட்ட நிவாரணப் பொருட்களை நலிவடைந்த குடும்பங்களுக்கும், வெளிமாநில தொழிலாளர்கள் **25 பேருக்கும்**, பள்ளியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் **300 குடும்பங்களை** தேர்ந்தெடுத்து அரிசி பருப்புகளையும், சுகாதாரத் துறை தூய்மை பணியாளர்களுக்கு இரண்டு கட்டங்களாக அரிசி பருப்புகளும் வழங்கினீர்கள். மேலும் காவல்துறைக்கு **ரூ 15000** மதிப்புள்ள கம்பியூட்டர் பிரின்டர் , **08.06.2020** அன்று **ரூ.54000** மதிப்புள்ள மூன்று **RO water purifier** ஐ **கொளத்தூர் காவல் நிலையம் , அரசு மருத்துவமனை மற்றும் நிர்மலா மேல்நிலைப்பள்ளிக்கும்** வழங்கியமைக்கு நிர்வாகத்தினர்,ஆசிரியர்கள்,அலுவலர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.உங்களின் இந்த சேவைப் பணி என்றும் தொடர வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,





Tel : 04298 251631
E mail : nirmalakolathurhss@gmail.com